<u>2026 மார்ச் மாதம் 25– ஆம் தேதி புதன்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 136/2025</u>

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW10 (LW14) – முருகன் |
| தகப்பனார் பெயர்: | மாயத்தேவர் |
| ஊர்: | மாரியம்மன்கோவில்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | அச்சு அலுவலகத் தொழில் |
| வயது : | 55 |

25.03.2026

(1, 4, 8, 9 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 2, 3, 5, 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, மாரியம்மன்கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் அச்சு தொழில் செய்து வருகிறேன். தற்போதிலிருந்து சுமார் 14, 15 ஆண்டுகளுக்கு முன்பு காலை சுமார் 7 மணியளவில் மாரியம்மன்கோவில்பட்டியில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி உள்ள முருகன் என்பவர் டீக்கடை முன்பு நானும், பிச்சைமணி என்பவரும்

இருந்த போது, பழனிசெட்டிபட்டி போலீசார் அங்கு வந்தார்கள். வரைபடம் தயார் செய்தார்கள். பின்பு சம்பவ இடத்தில் தயார் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்ய சொன்னார்கள். நான் அதில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

2. நான் எந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் மாரியம்மன்கோவில்பட்டியில் தெற்கு பக்கம் உள்ள முருகன் டீக்கடையில் வைத்து கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் நான் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான், பால்பாண்டி வழக்கிற்காக கையொப்பம் வாங்கினார்கள். நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, போலீசாருக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>9ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

<u>(1 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 9ம் எதிரி தரப்பினரால் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்)</u>

3. காவல்நிலையத்தில் வைத்து மற்றொரு கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.03.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.25 18:27:20 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.03.2026